MAY 2024 **P/ID 35320/PTL2K**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. பெரியாரின் இளமைக்கால வாழ்வியலைக் குறிப்பிடுக.

2. பெரியாரின் வேறு பெயர்களைக் கூறுக.

3. நாகம்மையை அறிமுகப்படுத்துக.

4. காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தின் மீது பெரியார் கொண்டிருந்த பற்றினை விளம்புக.

5. இந்திய தேசிய காங்கிரசில் இருந்து பெரியார் எப்போது வெளியேறினார்?

6. சுயமரியாதை இயக்கத்தின் தோற்றுவாயினைக் கூறுக.

7. வைக்கம் போராட்டத்தில் பெரியார் கலந்து கொள்ளக் காரணம் என்ன?

8. சேரன்மாதேவி குருகுலம் எதனால் மூடப்பட்டது?

9. பெண்ணுரிமை குறித்த பெரியாரின் கருத்து யாது?

10. பெரியார் ஏற்று நடத்திய இதழ்களைக் குறிப்பிடுக.

11. தமிழ் எழுத்துரு மாற்றத்திற்குப் பெரியார் கூறிய காரணமென்ன?

12. பெரியாரின் மறைவினை விளம்புக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடை எழுதுக.

13. இறைமறுப்பாளராகப் பெரியார் மாறக் காரணம் என்ன? விளக்கம் தருக.

14. வணிகத் தொழிலில் பெரியாருக்கு இருந்த நன்மதிப்பினை எடுத்துரைக்க.

15. இந்திய தேசியக் காங்கிரசில் பெரியாருக்கு இருந்த ஈடுபாட்டினை விளக்குக.

16. சுயமரியாதை இயக்கத்தின் தலையாயப் பணியினைத் தொகுத்துரைக்க.

17. சேரன்மாதேவி குருகுலப் போராட்டத்தில் பெரியார் கொண்டிருந்த நிலைப்பாட்டினை எடுத்தியம்புக.

18. பெண்கள் விடுதலைபெறப் பெரியார் ஆற்றியப் பணிகளைத் தொகுத்துரைக்க.

19. பெரியாரின் இதழியல் பணிகளைப் பட்டியலிடுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே
500 சொற்களில் விடை எழுதுக.

20. ஈரோடு நகர்மன்றத் தலைவராகப் பெரியார் ஆற்றிய அரும் பணிகளைப் பட்டியலிடுக.

21. இந்திய தேசிய காங்கிரசுப் பேரியக்கத்தில் பெரியாரின் பங்குப் பணியினை விளக்கி வரைக.

22. வைக்கம் போராட்டமும் பெரியாரும் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

23. பெண்கள் ஏற்றம்பெறப் பெரியார் மேற்கொண்ட முயற்சிகளை விவரிக்க.

24. தமிழ் மொழிகாப்புப் போராட்டத்தில் பெரியாரின் பங்களிப்பினை விரித்துரைக்க.

———————